**இலங்கை தொழில் பயிற்சி அதிகார சபை- 2020**

------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுகள்

-----------------------

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

------------------------------------------

இலங்கை தொழில்சார் பயிற்சி அதிகார சபையின் 2020 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றுகை கூற்று, தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் கூற்று மற்றும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக் கூற்றுகளுக்கு ஏற்புடையதான குறிப்புகள் மற்றும் சாராம்சப்படுத்திய முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றைக் கொண்டமைந்துள்ள 2020 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் 154(1) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 ஆம் ஆண்டு 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வுச் செய்யப்பட்டது. பாராளுமன்றத்திடம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துகள் மற்றும் அவதானிப்புகள் இவ்வறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வறிக்கையில் 1.5 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களால் ஏற்படும் தாக்கங்களைத் தவிர்ந்து, அதிகார சபையின் 2020 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆந் திகதியில் நிதிசார் நிலைமையினையும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான அதன் நிதி செயலாற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

------------------------------------------------------------------------

இவ்வறிக்கையில் 1.5 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக்கொண்டு எனது அபிப்பிராயம் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை கணக்காய்வு தரநியமம்படி (இ.க.த.நி) பிரகாரம் என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த கணக்காய்வு தரநியமம்படி எனது பொறுப்பு, இவ்வறிக்கையில் நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை வழங்கும் பொருட்டு என்னால் பெற்றுக்கொண்டுள்ள கணக்காய்வு சாட்சிகள் போதுமானதும் பொருத்தமானதெனவும் நம்புகின்றேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

------------------------------------------------------------------------------------------------------

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகார சபையின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு

வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகார சபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அதிகார சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் அதிகார சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

-----------------------------------------------------------------------------------------------------

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக அதிகார சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு அதிகார சபையின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அதிகார சபைக்குள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் அதிகார சபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயன்ற வரை தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரிசோதனை செய்வதற்கு கணக்காய்வு விடயவெல்லையும் விரிவாக்கப்பட்டுள்ளது.

- தகவல் சமர்ப்பித்தல் தொடர்பானவிடத்து பல்கலைக்கழகத்தின் கடமைகள் தொடர்ச்சியாக மதிப்பீட்டுக்கு உட்படும் வகையில் அதன் ஒழுங்கமைதல், முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் முறையாகவும் போதுமான அளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும், குறித்த முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் பயனுள்ளவாறு பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,
- ஏதேனும் எழுத்தினாலான சட்டத்திற்கு அல்லது பல்கலைக்கழகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகி நிறுவனம் செயற்பட்டுள்ளது எனவும்.
- தமது தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்கியொழுகி செயலாற்றப்பட்டுள்ளது எனவும்,
- வளங்கள், காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்கியொழுகவும் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் பெறப்பட்டுப் பயன்படுத்தப்பட்டுள்ளது எனவும்,

## 1.5 நிதிக் கூற்றுகள்தயாரித்தல் தொடர்பாக கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 நிதிக் கூற்றுகள் தயாரித்தல் தொடர்பான உள்ளக கட்டுப்பாடு

கொடுக்கல்வாங்கல் முகாமைத்துவத்தில் பொதுவான மற்றும் உறுதியான அதிகாரத்துடன் செயற்படல், உரியதான அறிக்கையிடல்களை நியமங்களுக்கு

ஒழுங்கமைவாக தயாரிப்பதற்கு தேவையானவாறு கொடுக்கல்வாங்கல்களை பதிவு செய்தல், சொத்துக்களுக்கான கணக்கீட்டு நெறிமுறை பேணிச் செல்லுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் உரிய அதிகாரத்துவத்துடன் மட்டும் சொத்துக்களை அணுகுதல், குறிப்பு வைக்கப்பட்ட சொத்துக்களுக்கான கணக்கீட்டு நெறிமுறை தற்போதுள்ள சொத்துக்களுடன் நியாயமான காலப் பகுதிக்குள் ஒப்பிடுதல், வேறுபாடுகள் இருப்பின் அவை தொடர்பாக உரியவாறு நடவடிக்கை எடுத்தல் என்பவற்றுக்கு நியாயமான உறுதியினை பெற்றுக்கொள்வதற்கு போதியளவிலான ‘‘சிறப்பாக திட்டமிடப்பட்ட’’ உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையை நிறுவனத்தால் பேணிச்செல்லுதல் அத்தியாவசியமாகும். பொதுப்பேரேடு, நாட்குறிப்பேடுகள், நாட்குறிப்பேடு வவுச்சர்கள், கொடுப்பனவு வவுச்சர்கள் ஆகிய பிரதான கணக்கீட்டு அறிக்கைகளை பராமரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள் பின்வரும் தலைப்புகளின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளது.

### 1.5.2 இலங்கை அரச துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | ஏற்புடைய நியமத்துக்கு தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை அரச துறைக் கணக்கீட்டு நியமம் 01 இன் 48 ஆம் பிரிவின் பிரகாரம் இலங்கை அரச துறைக் கணக்கீட்டு நியமங்கள் மூலம் தேவையான அல்லது அனுமதி வழங்கப்பட்டுள்ள சந்ர்ப்பம் தவிர்ந்த வருமானங்கள் செலவுகள் செய்யப்-படக் கூடாத போதும் 06 வருமான விடயங்கள் தொடர்பில் ரூ.44,150,305 வருமானத்தில் ரூ.23,847,123 தொகை ஈடுசெய்ய-ப்பட்டு தேறிய பெறுமதியாக ரூ.20,303,182 தொகை நிதி செயலாற்றுகை கூற்றில் காட்டப்பட்டது. | அதிகார சபையினால் வருமான மார்க்கங்கள் தொடர்பான பேரேட்டுக் கணக்குகள் வருமா-னங்கள் மற்றும் செலவுகள் என வெவ்வேறாக பேணிச் செல்லப்படுவதுடன் வருமான நிலைமைக் கூற்றினை சமர்ப்பிக்கும் போது அதன் தேறிய பெறுமதி காட்டப்பட்டுள்ளது. | இலங்கை அரச துறைக் கணக்கீட்டு நியமங்க-ளுக்கு அமைய நிதிக் கூற்றுக்களில் வருமான-ங்கள் செலவுகள் ஈடுசெய்யப்படக் கூடாது. |
| (ஆ) | இலங்கை அரச துறைக் கணக்கீட்டு நியமம் 7 இன் 14 ஆம் பிரிவின் பிரகாரம் சொத்து உருப்படியுடன் தொடர்புடைய எதிர்கால நன்மைகள் அல்லது சேவை சாத்தியக் கூறுகள் உட்பொருளை நோக்கி பாயும் சாத்தியம் உள்ள போது மற்றும் சொத்தின் கிரயம் அல்லது நியாயமான பெறுமதி-யினை நம்பகமான முறையில் அளவீடு செய்ய முடிகின்ற போது உட்பொருளின் சொத்தாக இனம் கண்டு கணக்குப் பதிதல் வேண்டும். ஆயினும் அதிகர சபையினால் 2019 ஜுன் மாதம் | இங்கு குறிப்பிடப்பட்ட பயிற்சி நிலையங்களின் உரிமை பிரதேச செயலாளருக்கு உரியது என்பதுடன் இவற்றுக்காக நிபுணத்துவ ஆலோசகர் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்டு நிறுவனத்தின் அனைத்து காணி-களையும் கையகப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | இலங்கை அரச துறைக் கணக்கீட்டு நியமங்க-ளுக்கு அமைய நிறுவனத்தின் வழிநடாத்தல் நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படும் சொத்துக்கள் கணக்குகளில் பதியப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | முதல் பாடநெறிகள் நடாத்திச் செல்லப்படும் கிரயம் ரூ.1,833,749,343 தொகையான ஒருகொடவத்த தேசிய மத்திய நிலையக் கட்டடம் மற்றும் அதிகார சபையின் பாடநெறிகள் நடாத்திச் செல்லப்படும் கையகப்படுத்தப்படாத 28 காணிகளின் பெறுமதி கணக்குகளில் பதியப்படவில்லை. | | |
| (இ) | இலங்கை அரச துறைக் கணக்கீட்டு நியமம் 07இன் 47 ஆம் பந்தியின் பிரகாரம் ஆதனத் தொகுதிகள் மற்றும் உபகரண உருப்படிகளின் நியாயமான பெறுமதி குறிப்பிட-த்தக்க அளவு மாற்றமடை-ந்திருப்பின் அச் சொத்துக்கள மீள்மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதும் அதிகார சபைக்குச் சொந்தமான கிரயம் ரூ.6,172,723,341 தொகையான காணி மற்றும் கட்டடங்கள் 2008 ஆம் ஆண்டுக்குப் பின்னர் மீள்மதிப்பீடு செய்யப்படவில்லை. இதன் காரணமாக அச் சொத்துக்களின் நியாயமான பெறுமதி நிதிக் கூற்றுக்கள் மூலம் காட்டப்படவில்லை. | தற்போது ஆதனத் தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் சொத்து மீள்மதிப்பீட்டை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. | தொடர்புடைய நியமத்தின் பிரகாரம் நடைமுறை அல்லாத சொத்துக்கள் 03 அல்லது 05 ஆண்டுகளுக்கு ஒரு தடைவ மீள்மதிப்பீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஈ) | இலங்கை அரச துறைக் கணக்கீட்டு நியமம் 12 இன் பிரகாரம் அறுதியுறுதிக் காணிகள் மற்றும் குத்தகைக் காணிகள் நிதிக் கூற்றுக்கள் மூலம் வேறுபடுத்திக் காட்டப்படவில்லை என்பதுடன் அதிகார சபையினால் மொத்தம் ரூ.9,842,565 தொகையான 05 குத்தகைக் காணிகள் தொடர்பான நியமத்தின் பிரகாரம் முறையாக செய்யப்படவில்லை. | இலங்கை அரச துறைக் கணக்கீட்டு நியமம் 12 இற்கு அமைய சரியான முறையில் எதிர்காலத்தில் கணக்குகளை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தொடர்புடைய நியமத்தின் பிரகாரம் முறையாக மதிப்பிடப்படல் வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் முழுப் (100%) பங்குரிமையுடன் 2013 டிசம்பர் 18 | இக் கம்பனியின் பங்குகள் எதுவும் தொழிற்பயிற்சி அதிகார சபைக்குச் | 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 51(4)(a) |

| | | | |
|---|---|---|---|
| | ஆம் திகதி வீ.ரீ.ஏ.ஹோல்டிங் (பிரைவேட்) லிமிடட் என்ற பெயரில் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழ் கம்பனியாக பதிவு செய்யப்பட்டது. ஆயினும் 2013 டிசம்பர் 18 ஆம் திகதி முதல் 2020 டிசம்பர் 31 ஆம் திகதி வரை உரிய கம்பனியின் நிதிக் கூற்றுக்களுடன் ஒன்றிணை-க்கப்பட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து அந்த நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | சொந்தமாக காணப்பட்டத-ற்கான எழுத்தாவணங்கள் அல்லது வருடாந்த கணக்குகளில் குறிப்பிடப்படவில்லை. | பகுதியில் பங்குவழங்கல் சான்றிதழ் பிரகாரம் ரூ.10 பெறுமதியான பங்குகள் தொழிற்பயிற்சி அதிகார சபைக்கு வழங்கப்பட்ட-மையால் ஏற்புடைய கம்பனினியின் தகவல்களை துரிதமாக கணக்காய்வுக்கு சமர்ப்பிக்க வேண்டிக் காணப்படல். |
| (ஆ) | 2017 டிசம்பர் 20 ஆம் திகதிய அமைச்சரவை அனுமதியின் பிரகாரம் தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபைக்கு வழங்கப்பட்ட காணிக்குப் பதிலாக இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபைக்கு கிடைக்கப் பெற்ற 02 ஏக்கர் 03 ரூட் 38.38 பர்ச்சஸ் விஸ்தீரணமுள்ள அத்திடிய பிரதேசத்தின் ‘‘அத்திடிய வயல் மற்றும் ஹுணுகும்புர’’ எனும் காணி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கு-களில் பதிவு செய்யப்படவில்லை. | இக் காணி முறையாக தொழிற்பயிற்சி அதிகார சபைக்கு கையகப்படுத்தும் பணிகள் நடைபெறுவதுடன் உரிய முறையில் கையேற்பு நடைபெற்ற பின்னர் கணக்குகளில் பதிவு செய்யப்படும். | நிறுவனத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படும் நடைமுறை அல்லாத சொத்துக்கள் அனைத்தும் கணக்குகளில் பதியப்படல் வேண்டும். |
| (இ) | 2018 டிசம்பர் 31 இல் மோட்டார் வாகன வகுப்பின் கீழ் சொத்துக்கள் என இனம் காணப்பட்ட ரூ.4,496,902 தேறிய பெறுமதியான 24 மோட்டார் வாகனங்கள் அந்த ஆண்டு மேற்கொள்ளப்பட்ட மீள்மதிப்பீட்டின் போது தவறவிடப்பட்ட போதும் அதனை சரி செய்வதற்கு மீளாய்வு ஆண்டின் போது நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | மோட்டார் வாகன வகுப்பின் பயிற்சிப் பணிகளுக்காக வழங்கப்பட்ட 24 மோட்டார் வாகனங்களின் பதிவு இரத்துச் செய்யப்பட்ட பின்னர் முறையாக கணக்கேடுகளில் இருந்து பதவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மோட்டார் வாகன வகுப்பின் கீழ் கணக்குகளில் பதிவு செய்யப்பட்ட 24 மோட்டார் வாகனங்கள் தற்போது பயன்படுத்தப்படும் பிரிவு இனங் காணப்பட்டு சரியாக கணக்குகளில் பதிவு செய்யப்படல் வேண்டும். |
| (ஈ) | இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபைக்கும் மொபிடெல் நிவனத்து-க்கும் இடையில் தொலைபேசி சிம் அட்டைகளைப் பெற்றுக்கொள்ளல் தொடர்பாக எட்டப்பட்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் 2019/ 2020 ஆண்டு தொடர்பில் 2020 ஆகஸ்ட் 12 ஆம் திகதி கிடைக்கப்பெற்ற ரூ.1,300,000 தொகை ஏனைய வருமானங்களின் கீழ் கணக்கு-களில் பதிவு செய்யாமல் அத் | இனிமேல் இவ்வாறான பெறுவனவுகளை வலுமானக் கணக்கில் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நிதி அறிக்கைகளை தயாரிக்கும் போது ஆண்டு தொடர்பான அனைத்து வருமானங்கள் மற்றும் செலவுகள் சரியாக கணக்குகளில் பதிவு செய்யப்படல் வேண்டும். |

தொகை நோக்கத்துக்கு முரணான செயற்பாட்டுக்காக செலவு செய்யப்பட்ட காரணத்தால் ஆண்டின் வருமானம் அத் தொகையினால் குறைவாக காட்டப்பட்டது.

## 1.6 சட்டம், விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுக்கு இணங்காமை

| | சட்டம், விதிகள மற்றும் ஒழுங்குவிதிகள் | இணங்காமை | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதிக் கோவை | | | |
| | i. நிதி ஒழுங்குவிதியின் 04 ஆம் உப அட்டவணையின் பொது மாதிரிப் படிவம் 288 | அனைத்து நிறுவனங்களினாலும் நிலையான சொத்துப் பட்டியல் ஒன்று பேணப்பட வேண்டிய போதும் அதிகார சபையின் 2020 டிசம்பர் 31 இல் காணப்பட்ட ரூ.6,279,859,791 ஆதனத் தொகுதி உபகரணங்களுக்காக நிலையான சொத்துப் பட்டியல் ஒன்று பேணப்படவில்லை. | இனிமேல் இவ்வாறான நிலைமைகள் ஏற்படாதிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். | நிதி ஒழுங்குவிதிகளில் காட்டப்பட்டுள்ள மாதிரிக்கு அமைவாக நிலையான சொத்து ஆவணங்கள் தயாரிக்கப்படல் வேண்டும். |
| | ii. நிதி ஒழுங்குவிதி 1646 | ஓட்டத்தில் ஈடுபடுத்தப்படும் ஒதுக்கு வாகனங்களின் ஓட்டக் குறிப்புக்கள் அடுத்த மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதும் ஒதுக்கின் 123 வாகனங்கள் தொடர்பில் 2019 ஸனவரி மாதம் முதல் 2021 டிசம்பர் வரை ஏற்புடைய நாளாந்த ஓட்டக் குறிப்புக்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. அதன் காரணமாக ஏற்புடைய கால எல்லைக்குள் செலவிட-ப்பட்ட | தற்போது கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | 2022 ஏப்ரல் 25 இல் 2019 ஆம் ஆண்டு ஒதுக்கின் 134 வாகனங்களுக்காகவும் 2020 ஆம் ஆண்டு 93 வாகனங்களுக்காகவும் 2021 ஆம் ஆண்டு 52 வாகனங்களுக்காகவும் ஓட்டக் குறிப்புக்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | ரூ.28,280,105 எரிபொருள் நுகர்வு தொடர்பில் பரிசோதிக்க முடியவில்லை. | | |
| (ஆ) சுற்றறிக்கைகள் | | | |
| i. 2015 ஜுலை 15 ஆம் திகதிய 3/ 2015 ஆம் இலக்க அரச கணக்கு சுற்றறிக்கை | சுற்றறிக்கையின் 371(2) ஆம் பந்தியின் பிரகாரம் வேளைக்கேற்ற இடைக்கால முற்பணமாக ஏதேனும் ஒரு விசேட பணிக்காக பதவிநிலை தரத்திலான உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் ஒரு சந்தர்ப்பத்தில் உயர்ந்தபட்சம் ரூ.100,000 வரை மாத்திரம் இடைக்கால முற்பணம் வழங்கு முடியும் என்ற போதும் அதற்கு முரணாக மாவட்ட அலுவலகம் மற்றும் பிரதான அலுவலகத்தில் 10 சந்தர்ப்பங்களில் ரூ.107,500 முதல் ரூ.300,000 வரையான இடைக்கால முற்பணம் வழங்கப்பட்டது. | தற்போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| ii. 2020 ஜனவரி 27 ஆம் திகதிய PED/ 2020 ஆம் இலக்க திறைசேரி செயலாளர் சுற்றறிக்கை | (a.) தொடர்புடைய சுற்றறிக்கை பிரகாரம் தவிசாளர்களை நியமிக்கும் போது எந்தவித புதிய ஆட்சேர்ப்பினையும் மேற்கொள்ளக் கூடாதென அறிவிக்கப்பட்ட போதும் அதிகார சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் இல்லாத இரண்டு ஆலோசகர் பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டு ஆண்டில் படிகள் மற்றும் எரிபொருள் கொடுப்பனவாக மொத்தம் ரூ.1,749,872 செலுத்தப்பட்டது. | நிறுவனத்தின் தேவைக்கு அமைய நிபுணத்துவ அறிவைப் பெற்றுக் கொள்வதற்காக பணிப்பாளர் சபையின் அனுமதியுடன் நிபுணத்துவ ஆலோசகர்கள் ஆட்சேர்க்கப்பட்டு உரிய கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டுள்ளன. | அனுமதிக்கப்பட்ட ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்ளும் போது அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் நிலவும் பதவிகளுக்காக மாத்திரம் ஆட்சேர்க்கப்படல் வேண்டும் என்பதுடன் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புக்கள் மற்றும் பதவியுயர்வு நடை-முறையின் பிரகாரம் ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு மேற்-கொள்ளப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (b.) | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு மேல-திகமாக நிறுவனத்தின் தவிசாளர்கள் எந்தவித மேலதிக படிகள் அல்லது நிதி ரீதியான நன்மைகள் பெற்றுக்-கொள்ளக் கூடாதென வலியுறுத்தப்பட்ட போதும் அதற்கு முரணாக மேலதிக எரிபொருள் கொடுப்ப-னவாக மொத்தம் ரூ.446,673 வெளிவாரி பிரயாணங்களுக்காக மற்றும் ஹோட்ட-ல்களின் தங்குமிடக் கட்டணமாகவும் உணவுகளுக்காக-வுமான கொடுப்ப-னவாக மொத்தம் ரூ.435,982 தொகையினை தவிசாளருக்குச் செலுத்தப்பட்டது. | இவ் அதிகார சபையின் தவிசாளர் மற்றும் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர் ஆகிய பதவிகளை ஒரே நபர் வகிப்பதுடன் எரிபொருள் செலவுக்காக பணிப்பாளர் சபையின் பரிந்துரைக்கு அமைய அமைச்சு செயலாளரின் அனுமதியுடன் இச் செலவினம் மேற்கொள்ளப்பட் டுள்ளது. | மேலதிக எரிபொருளுக்காக அமைச்சு செயலாளரின் தழுவல் அங்கீகாரம் பெறப்பட்ட போதும் ஏனைய உணவு மற்றும் தங்குமிட கட்டணங்களுக்காக எந்தவொரு அனுமதியும் பெறப்படவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வு ஆண்டின் செயற்பாட்டு விளைவு ரூ.36,288,167 குறைவு ஏற்பட்டதுடன் அதனோடு இணைந்ததாக முன்னைய ஆண்டின் குறைபாடு ரூ.77,296,679 ஆக அமைந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவில் ரூ.41,008,512 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. அவ் அதிகரிப்புக்கு செயற்பாட்டு செலவுகள் குறைவடைதல் பிரதான காரணமாக அமைந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்திறனற்ற முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2006 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்துக்கான பங்களிப்பு மதிப்பீடு செய்யப்பட்ட போது | அதிகார சபையின் செலவினங்களுக்காக வழங்கப்பட்ட திறைசேரி ஒதுக்கீடுகள் மூலம் அச் செலவுகளுக்கான | கவனயீனமாக செயற்பட்ட காரணத்தால் மேலதிக கட்டணம் செலுத்த நேரிட்டது. ஆகவே ஏற்புடைய பொறுப்புக் கூற |

| | | | |
|---|---|---|---|
| | வாழ்க்கைச் செலவுப் படி கருத்திற் கொள்ளப்படாமை காரணமாக 2019 ஆம் ஆண்டு செலுத்த நேரிட்ட ரூ.7,898,073 மேலதிகக் கட்டணத்தை ஏற்புடைய தரப்பிடம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டன. | வேண்டிய உத்தியோகத்தர்களை இனம் கண்டு அவர்களிடம் அத் தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள செலவுகளுக்காக மாத்திரம் திறைசேரி ஒதுக்கீடுகள் செலவு செய்யப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்ட போதும் மற்றும் திறன்கள் அபிவிருத்தி, கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சின் செயலாளரின் 2020 செப்டம்பர் 08 ஆம் திகதிய கடிதம் பிரகாரம் இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் 25 ஆம் ஆண்டு நிறைவு விழாவுக்காக எந்தவொரு அரச நிதியும் செலவு செய்யப்படக் கூடாது எனக் குறிப்பிடப்பட்ட போதும் பெறுகைச் செயன்முறைக்கு முரணாக பெறப்பட்ட பொருட்கள் மற்றும் சேவைகளுக்காக திறைசேரி ஒதுக்கீட்டுத் தொகை ரூ.2,296,885 மற்றும் அதிகார சபையின் வருமானமாக கணக்குகளில் பதிவு செய்யப்பட வேண்டிய ரூ.1,300,000 தொகை செலவு செய்யப்பட்டது. | ஊழியர் நலன்புரி மற்றும் ஊழியர் ஊக்கப்படுத்தலை நோக்கமாக கொண்டு பிரிவுத் தலைவர்களுக்கு அறிவித்து மற்றும் தவிசாளரின் அனுமதியுடன் இச் செலவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. | பெறுகை வழிகாட்டல்களுக்கு அமைவாக செயற்பட வேண்டும் என்பதுடன் அரச நிதி தேவையற்ற பணிகளுக்காக செலவு செய்யப்படக் கூடாது. |

## 3.2 பயனற்ற அல்லது குறைபயன்பாட்டு சொத்துக்கள், ஆதனங்கள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| அதிகார சபையின் கீழ் ஒருகொடவத்தை கொரியன் டெக் நிறுவனத்திடம் கொழும்பு தொழில்சார் பயிற்சி நிலையம் மற்றும் கம்பகா தொழில்நுட்பக் கல்லூரி நிருமாணிக்கும் கொரியன் கடன் கருத்திட்டத்தில் 2019 ஆம் ஆண்டில் வழங்கியிருந்த மொத்தம் ரூபா. 15,743,838 ஆன 157 உபகரணங்கள் எந்தவொரு பயன்பாடுமின்றி பயனற்று காணப்பட்டதுடன், மொத்தம் ரூபா. | இது தொடர்பில் நியமனம் செய்துள்ள உள்நாட்டு முகவர் நிறுவனத்தால் செய-லற்ற நிலையில் காணப்பட்ட எல்லா உபகரணங்களையும் தற்போது இயல்பு நிலை-மைக்கு கொண்டு வருவதற்-கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதுடன், ஏதேனுமொரு உபகரணத்தில் கோளாறு ஏற்பட்டால் குறித்த கோளாரினை சரிசெய்வதற்கு உரிய முகவர் நிறுவனம் தொடர்ந்து நடவடிக்கைகளை | அதிகார சபையின் தேவைகள் மற்றும் முன்னுரிமையின் ஒழுங்குமுறைக்கமைவாக ஆதனங்களை கைப்பற்றுதல் மற்றும் கொள்வனவு செய்தல் மேற்கொள்ளல் வேண்டும். வெளிநாட்டு கடன் நிதியம் மூலம் வழங்கியுள்ள உபகரணங்கள் பெரும்பா லானவை பயனற்று இருந்த துடன், அந்த உபகரணங்களை துரிதமாக |

| | | |
|---|---|---|
| 1,784,794 பெறுமதியான 07 உபகரணங்கள் செயலற்று காணப்பட்டன. அதேபோன்று அந்த நிறுவனத்திடம் மருத்துவ அல்லது தாதியர் பதவிகள் அங்கீகரிக்க-ப்படாத நிலையில், ரூபா. 3,500,000 பெறுமதியான மருத்துவர்களால் பயன்படுத்துகின்ற உபகரணங்கள் மற்றும் மருந்துகள் வழங்கப்பட்டிருந்ததுடன், அந்த மருந்து வகைகள் பயன்படுத்தாது காலவதியாகி இருந்தது. | மேற்கொள்கின்றது. | பயன்படுத்துவத-ற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும். |

**3.3 பெறுகை முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்விற்கான ஆண்டுக்கு ஏற்புடையதாக பாதுகாப்புச் சேவைகளை பெற்றுக்கொள்வதற்காக சேவை வழங்குநரை தெரிவு செய்தல் பொருட்டு மேற்கொள்ளப்பட்ட பெறுகை செயற்பாட்டின்போது, தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரைகளை கவனியாது, இரண்டாவது ஆகக் குறைந்த விலை சமர்ப்பித்திருக்கும் பாதுகாப்புச் சேவை வழங்கும் கம்பெனியிடம் ஒப்பந்தம் வழங்குவதற்கு திணைக்களத்து பெறுகை குழு தீர்மானிக்கப்பட்டதன் காரணமாக, அதிகார சபைக்கு மீளாய்விற்கான ஆண்டில் ரூபா. 2,984,572 ஆன நட்டம் ஏற்பட்டிருந்தது. | இந்த ஒப்பந்தம் அளிக்கையில் Whole life Costing எண்ணக்கருவிற்கு அமைவாக மின தரத்துடன் கூடியதும், நடை முறையில் பராமரிக்க முடியுமான துமான நிறுவனமான இரண்டாவது ஆகக் குறைந்த விலை மனுதாரரிடம் ஒப்பந்தம் சமர்ப்பிக் கப்பட்டுள்ளது. ஆகையால் நிறுவனத்திற்கு நிதிசார் நட்டம் ஏற்பட்டுள்ளது என்பதை ஏற்றுக்கொள்ளவில்லை என்பதை தயவுடன் அறியத்தருகின்றேன். மாதாந்த இரசீதுகளுடன் சமர்ப்பிக்க ப்பட்டிருந்த வரவு அட்டவணை களை அடிப்படையாகக்கொண்டு கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது. | பெறுகை வழிகாட்டல்களுக் கமைவாக நடவடிக்கை மேற்கொள்ளதல் வேண்டும். |

## 3.4 ஒப்ப்நத நிருவாகத்தின் குறைப்பாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| துறைசார் திறன் அபிவிருத்தி நிதியத்தின் கீழ் 2019 ஆம் ஆண்டில் நிருமாணிக்கப்பட்ட கேகாலை மாவட்ட நிலையக் கட்டிடம் நிருமாணிப்பதற்காக குறைப்பாடுகளுடன் கூடிய பொறியியலாளர் மதிப்பீடுகளை அடிப்படையாகக்கொண்டு மதிப்பீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மற்றும் ஒப்பிட முடியாத விலைமனுவை சமர்ப்பித்த விலைமனுதாரரை தெரிவு செய்தமையால், இரண்டாவது ஆகக் குறைந்த விலை கணக்குகளை சமர்ப்பித்த விலைமனுதாரருடன் ஒப்பிடுகையில் அதிகார சபைக்கு ரூபா. 3,073,038 ஆன நட்டம் ஏற்பட்டள்ளது.<br><br>அதேபோன்று ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்கான இரசீதுகளுக்கு ஏற்புடையதாக கணக்காய்வால் 2021 திசெம்பர் 01 ஆம் திகதியில் பௌதீக ரீதியாக அளவுகளை மேற்கொள்ளும்போது, ரூபா. 4,857,017 மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | புதிய இரண்டு மாடி கட்டிடத்தின் முதலாவது மாடி நிருமாணிப்பதற்காக இக் கருத்திட்டத்தில் அப்போதைய நிலைமைபடி பொறியியலாளர் மதிப்பீடு தயாரிக்க ப்பட்டிருந்தது. இதற்காக தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர் அசாதாரண விலை கணக்குகளை சமர்ப்பித்திருந்தார்.<br><br>அதேபோன்று மேல் மாடியில் கொன்கிரீட் பலகையின் உண்மையான அளவு, உத்தேசிக்கப்பட்ட அளவிலும் பார்க்க குறைவாகும். அதற்கு காரணம் தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்த நிறுவனம் இந்த உருப்படியின் பொருட்டு அசாதாரணமான குறைந்த விலை கணக்கினை சமர்ப்பித்தலாகும். இந்தக் கருத்திட்டத்தின் அந்த நிலைமை ஏற்படுவதற்கான காரணம் யாதெனில், நிறைவேற்றப்பட வேண்டிய வேலை உருபடிகள் தொடர்பாக, ஒப்பந்த நிறுவனத்தின் ஒன்றின் விலை கணக்கு அதிகரித்ததன் காரணமாக அதிக பணத் தொகை கூடுதலாக செலுத்தலும், குறைவாக நிறைவேற்றப்பட வேண்டிய வேலைகளின் பொருட்டு ஒப்பந்த நிறுவனத்தின் ஒன்றின் விலை குறைவடைதல் காரணமாக எஞ்சுகின்ற தொகை மிகவும் குறைவடைதலுமாகும். | நிருமாணிப்பு ஒப்பந்தங்களின் பொருட்டு மதிப்பீடுகளை தயாரிக்கும்போது, சரியான அளவுகளின் பொருட்டு உண்மையான விலை கணக்குகளை பயன்படுத்த வேண்டுமென்பதுடன், ஒப்பந்தக்காரர்களை தெரிவு செய்கையில் விலை மதிப்பிடலை மிகவும் கவனமாக மேற்கொள்ளுதல் வேண்டும். |